சுருக்கம்

பாசனம் – நீர்வள ஆதாரத்துறை – பகுதி II திட்டம் 2010–2011 – திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கடானா நீர்த்தேக்கத் திட்டத்தில் உள்ள வடகுறவைப்பட்டு கால்வாயின் மேல்புறம் மடை எண் 1ல் ஒரு வடிகால் அமைக்கும் பணியை 2010–2011ம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்துதல் – நிர்வாக ஒப்புதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித்(ப்பி2)துறை

அரசாணை (நிலை) எண் 155

நாள் 27.05.2010
திருவள்ளுவர் ஆண்டு 2041
வைகாசி 13

படிக்கப்பட்டது:

நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) கடித எண் எப் / 7575 / பகுதி II / 2010-2011, நாள் 27.01.2010.

ஆணை:

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் தாமிரபரணி ஆற்றின் உபநதியான கடானா ஆற்றின் குறுக்கே, 1967–1974ஆம் ஆண்டில், கடனா நீர்த்தேக்கம் கட்டப்பட்டது. இந்நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 352 மில்லியன் கனஅடி. இந்த அணையின் முழு நீர்மட்டம் + 435.00 ஆகும். 2000–2004 ஆம் ஆண்டில், கடானா விரிவாக்கத் திட்டத்தின் கீழ், இந்நீர்த்தேக்கம் விரிவுபடுத்தப்பட்டு, அதன் கொள்ளளவு மேலும் 76.52 மில்லியன் கனஅடியாக உயர்த்தப்பட்டது. இந்த அணைதளத்தில் வடக்குறவைப்பட்டு மடை, ஆற்று மடை, பழைய அரசப்பட்டு மடை, புதிய அரசப்பட்டு மடை ஆகிய நான்கு மடைகள் உள்ளன. இவற்றின் மூலம் 9152 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

2. நவம்பர் 1992ல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் இந்த நீர்த்தேக்கத்தில் வண்டல் மண் படிந்து அதன் கொள்ளளவு சுமார் 92.48 மில்லியன் கன அடியாக குறைந்துள்ளது. இதனால் வடக்குறவைப்பட்டு மடையிலும் வண்டல் படிந்து வருகிறது. இந்த வண்டலை சுத்தம் செய்ய இயலாததால், மடையின் செயல்பாடு கடினமாகியுள்ளது. எனவே, வடக்குறவைப்பட்டு கால்வாயின் மடை எண் 1ன் மூலம் வினாடிக்கு 50 கனஅடி நீர் வெளியேற்றத்திற்காக ஒரு வடிகால் கட்ட இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த நீர் (வினாடிக்கு 50 கனஅடி) பருவகாலத்தில் ஒரு முறையோ அல்லது இருமுறையோ வடகுறவைப்பட்டு மடையின் மூலம் திறந்து விடப்பட்டு கடானா ஆற்றுக்கு திருப்பிவிடப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதால் 100.52 ஏக்கர் நேரடி பாசன நிலங்களும் 435.47 ஏக்கர் மறைமுக பாசன நிலங்களும் பாசன உறுதி பெறுகின்றன. இத்திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தப்பட வேண்டியது இல்லை. இத்திட்ட மதிப்பீட்டுத் தொகை 2010–2011 ஆண்டில் ரூ.8.00 இலட்சங்களாகும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது.

3. மேற்கண்ட திட்டத்தினை 2010–2011ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக் குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்துள்ளது.

அதன்படி, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கடானா நீர்த்தேக்கத் திட்டத்தில் உள்ள வடகுறவைப்பட்டு கால்வாயின் மேல்புறம் மடை எண் 1ல் ரூ. 8.00 இலட்சம் (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்) செலவில் ஒரு வடிகால் அமைக்கும் பணிக்கு 2010–2011ஆம் ஆண்டின் பகுதி II திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. சில்லறைச் செலவினம், சிறு மேற்பார்வைச் செலவுகள் மற்றும் எதிர்பாராச் செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின்கீழ் ஏற்படும் மொத்தச் செலவுகள், மொத்தப் பணி (Works) மதிப்பீட்டுத் தொகையில் 2.5%க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

4. மேலும், இத்திட்டப் பணிக்கான செலவினம், மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைவிட எக்காரணம் கொண்டும் அதிகரிக்கக் கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.

5. மேலே பத்தி 2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“4702 00 சிறுபாசனம் குறித்த மூலதனச் செலவு – 101 மேற்பரப்பு நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநில திட்டம் – JA சிறுபாசன சிறப்புத் திட்டம் – 16 பெரும்பணிகள் (த.தொ.கு. 4702 00 101 JA 1607)”

6. மேற்கண்ட திட்டப் பணியினை உடனடியாக மேற்கொண்டு குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும் மற்றும் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் 17.05.2010 நாளிட்ட அலுவல் சார்பற்ற எண் 25173 / பொ.ப. II / 2010ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலம், மதுரை–2.
மாவட்ட கருவூல அலுவலர், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (ஏ&இ), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை 1), சென்னை–18.
நகல்
நிதித் (பொ.ப. II/வ.செ (பொது II) துறை, சென்னை–9.
பொதுப்பணித்(சி.பா.1)துறை, சென்னை–9 (5 நகல்கள்).

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்